தினத்தந்தி



கயிறு இழுக்கும் போட்டியில் பங்கேற்ற பெண் ஊழியர்களை படத்தில் காணலாம்.

## இ.எஸ்.ஐ. துணை மண்டல அலுவலக

# ஊழியர்களுக்கான விளையாட்டு போட்டி

கோவை, ஆக.30–

தேசிய விளையாட்டு தினத்தையொட்டி தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகம் (இ.எஸ்.ஐ.) கோவை, நீலகிரி, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களை கொண்ட கோவை துணை மண்டல அலுவலகம் சார்பில் விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. இந்த போட்டி இ.எஸ்.ஐ. ஊழியர்களிடையே உடல் தகுதி, குழு உணர்வு, நட்புறவை ஊக்குவிப்பதை நோக்கமாக கொண்டு நடைபெற்றது. போட்டியில் பங்கேற்ற அதிகாரிகள் சுதந்திர போராட்ட வீரர்கள், முக்கிய விளையாட்டு வீரர்களின் நினைவாக வ.உ.சிதம்பரனார், விஸ்வநாதன் ஆனந்த், வீரமங்கை வேலுநாச்சியார், பவானி தேவி அணி என 4 அணிகளாக பிரிக்கப்பட்டனர். போட்டியானது கோவை இ.எஸ்.ஐ.அலுவலகம், துணை மண்டல அலுவலகம், பீளமேடு, பி.எஸ்.ஜி. மருத்துவ அறிவியல், ஆராய்ச்சி நிறுவன மைதானம் ஆகியவற்றில் நடைபெற்றது. ஆண்களுக்கு கிரிக்கெட், இறகுபந்து போட்டிகள் நடைபெற்றன. பெண்களுக்கு கயிறு இழுத்தல் போட்டி, எலுமிச்சை அண்டு ஸ்பூன் போட்டி உள்ளிட்ட போட்டிகளும் நடைபெற்றன. போட்டியின் முடிவில் அதிக புள்ளிகள் பெற்ற பவானி தேவி அணி முதலிடம் பெற்றது.